குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உளுந்தூர்பேட்டை.

**முன்னிலை : திருமதி.வே.கோமதி, பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை.

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள், திங்கள்கிழமை.

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 174/2025**

**CNR.NO.TNKA10 -001445-2025**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>எலவனாசூர்கோட்டை காவல் நிலைய<br>குற்ற எண் 49/2024 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | எதிரிகள் பெயர்:<br>1. திரு. அய்யப்பன் (வயது 32)<br>த/பெ. கணேசன்<br>2. திரு. மெர்வின் (வயது 20)<br>த/பெ. ஆப்ரகாம் |
| குற்றப்பிரிவுகள் | எதிரிகள் மீது இதச பிரிவு 379. |
| வனையப்பட்டது | எதிரிகள் மீது இதச பிரிவு 379. |
| தண்டிக்கப்பட்டது | இறுதியாக, 1,2 எதிரிகள் இதச பிரிவு 379 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1,2 எதிரிகள் இதச பிரிவு 379 –ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர்கள் விபரம்

| வ. எண் | பெயர் | த.பெ / க .பெ | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | அய்யப்பன் | கணேசன் | இந்து | விவசாயம் | மெயின் ரோடு, கூத்தனூர் கிராமம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் | 32 |
| 2 | மெர்வின் | ஆப்ரகாம் | கிருத்துவர் | டிரைவர் | வடக்கு மெயின் | 20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரோடு, எரையூர் கிராமம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் | |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 14.02.2024 |
| புகார் | : | 15.02.2024 |
| கைது தேதி | : | – |
| பிணை விடுவிப்பு | : | A1 The Hon'ble Principal District and Sessions Court Kallakurichi, Anticipatory bail order in Crl.M.P.No. 426/2024 on 01.03.2024<br>A2 The Hon'ble Principal District and Sessions Court Kallakurichi, Bail order in Crl.M.P.No. 312/2024 on 26.02.2024 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 21.06.2025 |
| வழக்கு விசாரணை முடிவு | : | 16.03.2026 |
| எதிரிகள் காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 01.04.2025 |
| Date of Questioning | : | 02.08.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | – |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>1. 26.11.2025 — 26.11.2025<br>2. 04.03.2026 — 04.03.2026<br>3. 11.03.2026 — 11.03.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 12.03.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |

| | | |
|---|---|---|
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது 01.04.2025 –ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 16.03.2026 –ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் உதவி வழக்குரைஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. ஆனந்த்., M.A., LLB.,MSw., அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**<u>2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–</u>**

கடந்த 14.02.2024 ஆம் தேதி 23.00 மணிக்கு இவ்வழக்கின் வாதியானவர், சாட்சி 1 மற்றும் சாட்சி 2 ஆகியோர் சகிதம் எலவனாசூர்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கூத்தனூர் ஆண்டவன் கோவில் அருகே உள்ள ஏரிக்கரையில் ரோந்து பணியில் கண்காணித்து கொண்டிருந்த போது அங்கு எதிரி 1 அய்யப்பன் த/பெ கணேசன், திருக்கோவிலூர் மெயின் ரோடு, கூத்தனூர் கிராம், உளுந்தூர்பேட்டை வட்டம் என்பவர் பதிவெண் இல்லாத JCB Chassis No.HAR3DXS4V03300076 ENGINE No.5502200 எண் கொண்ட JCB வாகனத்தை மேற்கண்ட ஏரியில் இருந்த வண்டல் மண்ணை எடுத்தும், 2. மெர்வின் த/பெ அப்ரஹாம் எறையூர் என்பவருக்கு சொந்தமான TN–15–E–9344 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் சுமார் 1 யூனிட் ஏரி வண்டல் மண்ணை அவர்களது சுய லாபத்திற்காகவும் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும நோக்கத்தோடு திருட்டு தனமாக அள்ளி வந்தது விசாரணையில் தெரியவந்தது– எதிரிகள் 1 மற்றும் 2 ன் செய்கையானது இ.த.ச பிரிவு 379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் என எலவனாசூர்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக

வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 240(1) –ன் படி 1,2எதிரிகள் மீது இதச பிரிவு 379 –ன் படி குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, கு.வி.மு.ச 240(2) பிரிவின் கீழ் அவர்களிடம் விளக்கி வினவிய போது எதிரிகள் பொய்வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சா,பொ1 முதல் சா.பொ 3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :-**

(1) அ.சா.1 திரு.ராமலிங்கம் தலைமைகாவலர் தனது சாட்சியத்தில், " நான் தற்சமயம் உளுந்தூர்பேட்டை மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். சம்பவ காலத்தில் எ.கோட்டை காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 14.02.2024 அன்று இரவு 10.30 மணிக்கு இரவு ரோந்து பணிக்கு நானும், உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன், 2ம் நிலை காவலர் மணிகண்டன், மூவரும் கூத்தனூர் ஏரிக்கறை பக்கமாக ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, அப்போது இருட்டில் யாரும் இல்லை ஜேசிபி மட்டும் ஏரியில் இருந்தது. டிப்பரில் வண்டல் மண் ஏற்றி கொண்டு இருந்தார்கள். அப்போது நாங்கள் ஜேசிபி அருகே சென்ற போது ஜேசிபி ஓட்டுனர் இறங்கி ஓடிவிட்டார். டிப்பர் டிரைவர் மட்டும் இருந்தார். அவரை கூப்பிட்டு காவல் ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் விசாரித்தார். விசாரித்தபோது தான் ஜேசிபி வாகனம் அய்யப்பன் உடையது என்றும், டிராக்டர் டிப்பர் தன்னுடையது என்றும் கூறினார். அப்போது அவரை உதவி ஆய்வாளர் விசாரித்த போது உரிமம் உள்ளதா என கேட்டதற்கு டிராக்டர் ஓட்டிய மெர்வீன் என்பவர் மண் எடுப்பதற்கு உரிமம் ஏதும் தன்னிடம் இல்லை என்று சொன்னார், அப்போது உதவி ஆய்வாளர் ஜேசிபி மற்றும் டிராக்டரை காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தோம். ஜேசிபி யை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து வந்தார் என்று தெரியாது. டிராக்டரை மெர்வின் காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார். சம்பவ இடத்தில் உதவி ஆய்வாளர் 15.02.2024 இரவு 1.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசரை நானும், காவலர் மணிகண்டன் கிரேடு எண். 691 ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினார். மணிகண்டனின் பணி எழுத்தர். ஆளில்லாத நேரங்களில்

அவர் ரோந்து பணியும் செய்வார்.என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் மணிகண்டன் என்பவர் கையொப்பம் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திரு. மணிகண்டன் தலைமை காவலர் தனது சாட்சியத்தில், " நான் தற்சமயம் களமருதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். நான் எ.கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது கடந்த 14.02.2024 அன்று இரவு 10.00 மணியளவில் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் தலைமையில் நானும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவரும் இரவு ரோந்துபணிக்காக சென்றபோது உதவி ஆய்வாளர் திரு. ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு கூத்தனூர் கிராமத்தில் உள்ள ஏரியில் வண்டல்மண் அனுமதி இன்றி எடுப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கூத்தனூர் ஏரிக்கு 15.02.2024 அன்று அதிகாலை 1.00 மணியளவில் சென்றபோது ஏரியினுள் ஒரு ஜேசிபி இயந்திரத்தின் மூலம் டிப்பரில் மண் அள்ளிக்கொண்டிருந்தார்கள்.மண் அள்ளிய இடத்தில் சென்றபோது ஜேசிபி இயந்திரத்தின் ஓட்டுநர் எங்களை கட்டதும் தப்பி ஓடிவிட்டார்.டிராக்டரின் ஓட்டுநர் அந்த இடத்தில் இருந்தார். அவரை விசாரித்தபோது அவர் பெயர் மெர்வின் என்றும், எறையூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் கூறினார். டிராக்டரை பரிசோதித்த போது அதில் 1 யூனிட் வண்டல் மண் இருந்தது. அது அரசு அனுமதி இன்றி எடுக்கப்பட்டது. காவல் ஆய்வாளர் ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து ஜேசிபி மற்றும் டிராக்டரை கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த மகசர் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டது. பின்னர் ஜேசிபி இயந்திரம், டிராக்டர் ஆகியவற்றுடன் டிராக்டரின் ஓட்டுநரை காவல் நிலையம் அழைத்து வந்தோம். நிலைய குற்ற எண். 49/2024 ல் 379 IPC r/w 21 (1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்து டிராக்டரின் ஓட்டுநர் மெர்வின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார்.இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என்றும்,சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 திரு. ஹரிகிருஷ்ணன் உதவிஆய்வாளர் தனது சாட்சியத்தில், "நான் தற்போது விழுப்புரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த14.02.2024 –ந் தேதி இரவு சுமார் 23.00 மணிக்கு எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்திற்கு உட்பட்ட கூத்தனூர் ஆண்டவர் கோயில் அருகே உள்ள ஏரியில் ரோந்து பணியில் நான் முதல்நிலை காவலர் திரு. ராமலிங்கம் மற்றும் திரு. மணிகண்டன்

ஆகியோருடன் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்படி ஏரியில் அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி கள்ளத்தனமாக ஏரி வண்டல் மண்ணை களவாடி சென்றதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி இடத்திற்கு நாங்கள் சென்றபோது JCB வாகனத்தை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த ஐயப்பன் வயது 30 த/பெ கணேசன் என்பவர் JCB –யை அங்கேயே நிறுத்திவிட்டு தப்பித்து சென்றுவிட்டார். மற்றும் மெர்வின் வயது 21 த/பெ ஆப்பிரகாம் என்பவர் அவருக்கு சொந்தமான TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் சுமார் 1 யூனிட் வண்டல் மண்ணை களவாடி சென்றவரை பார்ட்டி சகிதம் எதிரி மெர்வின் பிடித்து விசாரணை செய்ததில் மேற்படி நபர்கள் எவ்வித அரசு அனுமதியும் பெறமால் கள்ளத்தனமாக சுயலாபத்திற்காக விற்பனைக்காக அள்ளி சென்றதாக கூறியுள்ளார். மேற்படி நபரை அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி கள்ளத்தனமாக ஏரி வண்டல் மண்ணை களவாடி சென்றத்தற்காக 15.02.2024–ந் தேதி அதிகாலை சுமார் 00.30 மணிக்கு கைது செய்து உச்சநீதிமன்ற கட்டளையை நிறைவேற்றி கைது குறித்து, உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தோம். பின்னர் களவாட பயன்படுத்திய பதிவெண் இல்லாத JCB மற்றும் TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் உள்ள சுமார் 1 யூனிட் அளவுள்ள ஏரி வண்டல் மண்ணை அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் கைப்பற்றி என்னுடன் வந்த முதல்நிலை காவலர் ராமலிங்கம்,முதல்நிலை காவலர் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் 01.00 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். பின்னர் கைப்பற்றிய வழக்கின் சொத்துகள் மற்றும் எதிரி மெர்வின் பார்ட்டிகள் சகிதம் உதவியுடன் 01.30 மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்து மேற்படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து எலவனாசூர்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 49/2024 இதச சட்டப்பிரிவு 379 மற்றும் 21(1) MMDR ACT –ன் படி முதல்தகவல் அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.பின்னர் எதிரி மெர்வின் என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.பின்னர் வழக்கின் சொத்துகளை நமூனா 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த நமூனா 91 அ.சா.ஆ–3ஆகும். பின்னர் உளுந்தூர்பேட்டை உதவி பொறியாளர்(பொது பணித்துறை நீர்பாசனப்பிரிவு) அவர்களுடன் நீதிமன்ற உத்தரவின் படி எதிரி களவாடிய மணலைஅரசுக்கு ஆதாயம் தேடும் பொருட்டு வண்டல் மண்ணை அவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் 11.03.2024–ந் தேதி இதச சட்டப்பிரிவு 379 மற்றும் 21(1) MMDR ACT –என இருந்ததை பிரிவு மாற்றம் செய்து இதச சட்டப்பிரிவு 379 –ன் படி பிரிவு மாற்றம் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் எதிரியிடம் இருந்து கைப்பற்றிய வழக்குசொத்தான பதிவெண் இல்லாத JCB Engine no.h00381425, chesis No.

HAD3DXS4V03300076 (புகைப்படம்) அது சா.பொ.1 ஆகும். TN 15 E 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் (புகைப்படம்) அது சா.பொ.2 ஆகும். பதிவெண் இல்லாத டிப்பர் சுமார் 1 யூனிட் அளவுள்ள ஏரி வண்டல் மண் (புகைப்படம்) அது சா.பொ.3 ஆகும். மேற்படி வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து திரும்ப பெற்றுக்கொண்டனர். நான் இரவு நேரத்தில் வழக்கு சொத்தை பார்வையிட்டதால் Engine no.h00381425 –ஐ தவறுதலாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ளேன். பின்னர் நிலையம் வந்து வழக்கு சொத்தை பார்த்த போது Engine no.5502200 என தெரியவந்தது. பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவு 379 –ன் கீழ் இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6. கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை பொய்சாட்சி என மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6(a) அரசு தரப்பில் வாதம் :**

அரசு தரப்பில் 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவு 379 –ன் கீழான குற்றச்சாட்டு போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் குற்றவாளிகள் எனவே, தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**6(b) எதிரி தரப்பில் வாதம்:**

அரசுதரப்பு சாட்சிகளில் எவரும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை நிரூபிக்கும் வகையிலும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவு 379 –ன் கீழான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8. தீர்வு :-**

**(8.1)** கடந்த 14.02.2024 ஆம் தேதி 23.00 மணிக்கு இவ்வழக்கின் வாதியானவர், சாட்சி 1 மற்றும் சாட்சி 2 ஆகியோர் சகிதம் எலவனாசூர்கோட்டை

காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கூத்தனூர் ஆண்டவன் கோவில் அருகே உள்ள ஏரிக்கரையில் ரோந்து பணியில் கண்காணித்து கொண்டிருந்த போது அங்கு எதிரி 1 அய்யப்பன் த/பெ கணேசன், திருக்கோவிலூர் மெயின் ரோடு, கூத்தனூர் கிராம், உளுந்தூர்பேட்டை வட்டம் என்பவர் பதிவெண் இல்லாத JCB Chassis No.HAR3DXS4V03300076 ENGINE No.5502200 எண் கொண்ட JCB வாகனத்தை மேற்கண்ட ஏரியில் இருந்த வண்டல் மண்ணை எடுத்தும், 2. மெர்வின் த/பெ அப்ரஹாம் எறையூர் என்பவருக்கு சொந்தமான TN–15–E–9344 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பரில் சுமார் 1 யூனிட் ஏரி வண்டல் மண்ணை அவர்களது சுய லாபத்திற்காகவும் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும நோக்கத்தோடு திருட்டு தனமாக அள்ளி வந்தது விசாரணையில் தெரியவந்தது– எதிரிகள் 1 மற்றும் 2 ன் செய்கையானது இ.த.ச பிரிவு 379 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

(8.2) அ.சா.1 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "வாகன தணிக்கைக்கு காவல் நிலையத்தில் இருந்து இரவு 10.30 மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பினோம். ரோந்து பணிக்கு நானும், காவலர் மணிகண்டன், உதவி ஆய்வாளர் ஆகியோர் சென்றோம். உதவி ஆய்வாளரும், மணிகண்டனும் உதவி ஆய்வாளர் வாகனத்திலும், நான்என் இருசக்கர வாகனத்திலும் சென்றோம்" என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் இரவு 10.00 மணிக்கு சென்றோம். யார் யார் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் தலைமையில் நானும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவரும் இரவு ரோந்துபணிக்கு சென்றோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ணன் நானும், ஒரு இருச்சக்கர வாகனத்திலும், தலைமை காவலர் ராமலிங்கம் என்பவர் அவரது இருச்சக்கர வாகனத்திலும் சென்றோம்" என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பினேன் என்றால் மாலை 4.00 மணிக்கு கிளம்பினோம். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு போனோம் என்றால் இரவு 11.00 மணிக்கு போனோம். காவல்நிலையத்தில் இருந்து செல்லும் வழியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ரோந்து பணியில் சென்றுவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றோம். மூவரும் ஒரே வாகனத்தில் சென்றோமா அல்லது தனிதனியாக சென்றோமா என்றால் நியாபகம் இல்லை. அரசு வாகனத்தில் சென்றோமா அல்லது சொந்த வாகனத்தில் சென்றோமா என்றால் எனது இருசக்கரவாகனத்தில் சென்றேன்.

ரோந்து பணிக்கு செல்லும் போது டைரி, கார்பன் பேப்பர், ஏ4 சீட் , டார்ச் ஆகியவற்றை எடுத்துச்சென்றேன். சம்பவ இடத்தில் எதிரி மெர்வினை யார் பிடித்தது என்றால் நான் தான் பிடித்தேன்" என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.1 ரோந்து பணிக்கு இரவு 10.30 மணிக்கு கிளம்பியதாகவும், அ.சா.2 இரவு 10.00 மணிக்கு சென்றோம் என்றும் , அ.சா.3 மாலை 04.00 மணிக்கு கிளம்பினோம் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர்.

(8.3) அ.சா.1 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "ரோந்து பணிக்கு அரசு வாகனத்தை காவல் நிலையத்தில் விட்டுவிட்டு எங்களுடைய சொந்த வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி நேராக சம்பவ இடத்திற்கு சென்றோமா என்றால் உதவி ஆய்வாளர் 11.00 மணிக்கும், நான் 11.15 மணிக்கும் சம்பவ இடத்திற்கு சென்றோம்" என்றும், அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "எத்தனை மணிக்கு சம்பவ இடமான ஏரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் அதிகாலை 1.00 மணிக்கு காவலர் ராமலிங்கம் எத்தனை மணிக்கு சம்பவ இடமான ஏரிக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றால் எங்களுக்கு பின்னாலேயே அதிகாலை 1.00 மணிக்கு வந்தார். எதிரி மெர்வினை யார் எத்தனை மணிக்கு பிடித்தது என்றால் உதவி ஆய்வாளர் அதிகாலை 1.00 மணிக்கு பிடித்தார்" என்றும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர்.

(8.4) அ.சா.1 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "2–ம் எதிரியை மணிகண்டன் என்பவர்தான் பிடித்தார்" என்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில் எதிரி மெர்வினை உதவிஆய்வாளர் பிடித்ததாகவும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர்.

(8.5) அ.சா.1 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிதான் இரவு என்பதால் யாரும் இல்லை. 2ம் எதிரியை காவலர் மணிகண்டன் இரவு 11.00 மணிக்கு பிடிக்க உதவி ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளரும் மணிகண்டனும் எதிரியை பிடித்து விசாரித்த விவரம்எனக்கு தெரியாது, பிடித்த பிறகு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன்" என்றும், அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "எதிரி மெர்வினை யார் எத்தனை மணிக்கு பிடித்தது என்றால் உதவி ஆய்வாளர் அதிகாலை 1.00 மணிக்கு பிடித்தார்" என்றும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர்.

(8.6) அ.சா.1 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "எதிரி மெர்வினிடம் சம்பவ இடத்தில் வைத்து பாதி விசாரணையும், மீதி விசாரணை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று என்னிடம் உதவி ஆய்வாளர் கையொப்பம் பெற்றார்." என்றும், அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "எதிரி மெர்வினிடம் உதவி ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றாரா என்றால்பெறவில்லை" என்றும், அ.சா.3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை" என்றும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளனர்.

(8.7) முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் , "இன்று 14.02.2024–ஆம் தேதி 23.00 மணிக்கு எலவனாசூர்கோட்டை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் அரிகிருஷ்ணன் ஆகிய நானும் முதல்நிலை காவலர் 502 திரு. ராமலிங்கம் மற்றும் முதல்நிலைக்காவலர் 691 திரு.மணிகண்டன் ஆகியோர் சகிதம் எலவனாசூர்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கூத்தனூர் ஆண்டவன் கோவில் அருகே உள்ள ஏரிக்கரையில் ரோந்து பணியில் கண்காணித்து கொண்டிருந்தபோது பின்னர் பெயர்விலாசம் கேட்டுத் தெரிந்த ஐயப்பன் வ–30 த/பெ கணேசன் திருக்கோவிலூர் மெயின்ரோடு கூத்தனூர் கிரமம், உளுந்தூர்பேட்டை வட்டம் என்பவர் பதிவெண் இல்லாத JCB வாகனத்தை மேற்கண்ட ஏரியில் இருந்த வண்டல் மண்ணை ஏற்றிக்கொண்டிருந்தவரை" என்று கூறப்பட்டுள்ளது. அதாவது 2–வது எதிரிக்கு சொந்தமான TN15E9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் TN15E9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிப்பர் வாகனத்தின் உரிமையாளர் அந்தோணி செல்வராஜ் என்பது ஆவணங்களை பார்வையிடுகையில் அறிய முடிகிறது. அதே போல் பதிவு எண் இல்லாத JCB வாகனத்தின் உரிமையாளர் அரிகிருஷ்ணன் என்பது ஆவணங்களை பார்வையிடுகையில் அறிய முடிகிறது.

(8.8) அ.சா.3 யை எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்கையில், "டிராக்டர் வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எதிரி மெர்வினுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளேன். ஆவணத்தின் அடிப்படையில் வாகனத்தின் உரிமையாளர் எதிரி மெர்வின் அல்ல என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் போது JCB வாகனத்தை கண்ணால் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். JCB வாகனத்திற்கு பதிவெண் இல்லை என்பதை எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் வாகனத்தை பார்த்து தான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் சான்றுப்பொருள் 1–ன் புகைப்படத்தில் உள்ள வாகனத்தை தான் நான் கைப்பற்றினேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் சான்றுப்பொருள்

JCB வாகனத்தின் பதிவெண் உள்ளதா என்றால் உள்ளது. அதன் பதிவெண் TN15E9732 ஆகும்" என்று சாட்சியமளித்துள்ளதில் இருந்து JCB வாகனத்தின் பதிவெண் M.O.1–ல் TN15E9732 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை, கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.1, அ.சா.2 ன் போலிசார் வாக்குமூலத்திலும் பதிவெண் இல்லாத JCB என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்கிற நிலையில், அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய JCB சான்றுப் பொருள் 1 என்பது குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

(8.9) அ.சா.3 அரசு தரப்பு முதல் விசாரணையில், "நான் இரவு நேரத்தில் வழக்கு சொத்தை பார்வையிட்டதால் Engine no.h00381425 –ஐ தவறுதலாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ளேன். பின்னர் நிலையம் வந்து வழக்கு சொத்தை பார்த்த போது Engine no.5502200 என தெரியவந்தது" என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் மேற்படி சங்கதியை இறுதி அறிக்கையிலோ முதல்தகவல் அறிக்கையிலோ குறிப்பிட்டு கூறவில்லை. இன்ஜின் எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதை இறுதி அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்பதை ஒத்து கொண்டு அ.சா.3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "இறுதிஅறிக்கை தாக்கல் செய்யும் போது JCB வாகனத்தின் Engine no.5502200 என்று குறிப்பிட்டுள்ளேன். கைப்பற்றுதல் மகசரில் Engine no தவறாக உள்ளதை இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் குறிப்பிடப்படவில்லை " என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(8.10) எதிரிகள் உரிமமோ, அரசு அனுமதியோ இன்றி ஏரியிலிருந்து வண்டல் மண் எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான வருவாய் துறை சாட்சிகளோ, சான்றாவணங்களோ அரசுதரப்பில் முன்னிடப்படவில்லை. அரசுத்தரப்பில் அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி ஏரியிலிருந்து சுமார் 1 யூனிட் வண்டல் மண் எடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் விதமாக வண்டல் மண்ணுடன் கூடிய டிராக்டர் டிப்பர் வாகனத்தின் புகைப்படம் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

(8.11) அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்தும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தும் வேறு வேறாக உள்ளது என்ற நிலையில் கைப்பற்றுதல் மகஜர் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

(8.12) அ.சா.1 அரசு தரப்பு குறுக்குவிசாரணையில், "மண் அள்ள எதிரி கிராம நிர்வாக அலுவலரிடம் அனுமதி பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. கைபற்றுதல் மகசரில் 1 என்று குறிப்பிட்டு அதன் பிறகு கையொப்பம்

இட்டேனா என்றால் முதலில் நான் கையொப்பம் இட்டேன். மணிகண்டன் கைபற்றுதல் மகசரில் 2 என்று குறிப்பிட்டு அதன் பிறகு கையொப்பம் இட்டாரா என்றால் எனக்கு தெரியாது. அவர் கையொப்பம் இடுகையில் நான் அருகில் இல்லை" என்றும், சாட்சியமளித்துள்ளதில் இருந்து கைப்பற்றுதல் மகஜர் அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்பது குறித்த ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது.

(8.13) அ.சா.3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், "ஏரியிலிருந்து மண் எடுக்க வருவாய் துறை அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். எதிரிகள் வருவாய் துறையினர் அனுமதியின்றி மண் எடுத்தார்கள் என்பது குறித்து வருவாய் துறையினரிடம் விசாரித்தேனா என்றால் போனில் அழைத்தேன் அவர்கள் அழைப்பை எடுக்கவில்லை. நான் நேரடியாக சென்று வருவாய் துறையினரிடம் சென்று விசாரித்தேனா என்றால் இரவு நேரம் என்பதால் வருவாய் துறையினரிடம் விசாரிக்க இயலவில்லை. இறுதி அறிக்கை தாக்கல் செய்த போதாவது வருவாய் துறையினரிடம் விசாரித்தேனா என்றால் இல்லை" என்று சாட்சியமளித்துள்ளதில் இருந்து வருவாய் துறையினரிடம் அ.சா.3 விசாரிக்கவில்லை என்பதும் எதிரிகள் மீது முன்வழக்குகள் இல்லை என்பதும் அறியமுடிகிறது.

(8.14) அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் சாட்சியமளித்துள்ளதில் இருந்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் குறுக்குவிசாரணை சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதும், அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளதில் இருந்தும், அந்நிய சாட்சிகள் இல்லாமல் போலிசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் வழக்குச்சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு அ.சா.1 ஆல் கைப்பற்றுதல் மகஜர் உறுதிப்படுத்தப்படாததும், எதிரிகள் மீது முன்வழக்குகள் இல்லை என்று அ.சா.1 மற்றும் அ.சா.3 சாட்சியமளித்துள்ளதில் இருந்தும், வழக்குச் சொத்துக்களின் உரிமையாளர்கள் எதிரிகள் அல்ல என்பது ஆவணங்களை பார்வையிடுகையில் காணமுடிகிறது என்கிறநிலையிலும், கைப்பற்றப்பட்ட டிராக்டர் டிப்பரில் சுமார் 1 யூனிட் வண்டல் மண் களவாடி எடுக்கப்பட்டது என்பது குறித்த புகைப்படங்கள் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படாததும் ஆக, அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி சுயலாபத்திற்காக அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தோடு சுமார் 1 யூனிட் வண்டல் மண் களவாடினார்கள் என்ற எதிரிகள் மீதான இதச பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு நிரூபனம் செய்யப்படவில்லை. எனவே இதச பிரிவு 379 –ன் கீழ் எதிரிகள்

குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, எதிரிகள் இதச பிரிவு 379 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம்புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகள் இதச பிரிவு 379 –ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து குறித்த உத்தரவு உள்ளது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.03.16 12:07:00 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராமலிங்கம் த/பெ சேட்டு (தலைமை காவலர் ) |
| அ.சா. 2 | திரு.மணிகண்டன் த/பெ கிருஷ்ணமூர்த்தி (தலைமை காவலர் ) |
| அ.சா.3 | திரு.ஹரிகிருஷ்ணன் த/பெ பாலு ( உதவிஆய்வாளர் ) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 15.02.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ. 2 | 15.02.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 3 | 15.02.2024 | நமூனா 91 |
| அ.சா.ஆ. 4 | 11.03.2024 | பிரிவு மாற்று அறிக்கை |

<u>**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்**</u>:

| | |
|---|---|
| சா.பொ.1 | JCB 3DX PLUS வாகனத்தின் புகைப்படம் |
| சா.பொ.2 | TN15E9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் புகைப்படம் |
| சா.பொ.3 | பதிவெண் இல்லாத டிப்பர் சுமார் 1 யூனிட் அளவுள்ள ஏரி வண்டல் மண் (புகைப்படம்) |

| | |
|---|---|
| <u>**வழக்குச்சொத்து**</u><br><br>CP.No. 92/2024 | 1. JCB 3DX PLUSE<br>ENGINE NO – H00381425, CHASSIS NO – HAR3DXS4V03300076 – 1<br><br>2. Kubata MV 450 TN15E9344 என்ற பதிவெண் கொண்ட ENGINE NO – BNS5707, CHASSIS NO – KBVLBAFNCPEA24645 – 1<br><br>3.பதிவெண் இல்லாத டிப்பர் அதில் உள்ள சுமார் 1 யூனிட் வண்டல் மண் |

<u>**சா.பொ.1**</u>

புகார்தாரர் / மனுதாரர் திரு. அரிகிருஷ்ணன் த/பெ அம்மாசி இந்நீதிமன்றத்தில் Crl.M.P.No. 1013/2024, 12.04.2024 தேதிய உத்தரவுப்படி JCB 3DX PLUSE வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் JCB 3DX PLUSE வாகனத்தை புகார்தாரர்/ மனுதாரரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

<u>**சா.பொ.2**</u>

புகார்தாரர் / மனுதாரர் திரு. அந்தோனிசெல்வராஜ் த/பெ ஆரோக்கியதாஸ் இந்நீதிமன்றத்தில் Crl.M.P.No. 971/2024, 12.04.2024 தேதிய உத்தரவுப்படி TN –15 –E– 9344 என்ற பதிவுஎண் கொண்ட டிராக்டர் டிப்பர் நான்குசக்கரவாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் TN –15 –E– 9344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் டிப்பரை புகார்தாரர்/ மனுதாரரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

**<u>சா.பொ.3</u>**

1 யூனிட் கனிமத்தினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் உளுந்தூர்பேட்டை, வருவாய்வட்டாட்சியரால் எலவனாசூர்கோட்டை, காவல் உதவி ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள்</u>** : இல்லை
**<u>எதிரிகள் தரப்பில் சான்றாவணம்</u>** : இல்லை

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.03.16 12:07:17 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

**<u>நகல்கள்</u>**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், கள்ளக்குறிச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர், உளுந்தூர்பேட்டை
3. காவல் உதவி ஆய்வாளர், எலவனாசூர்கோட்டை காவல் நிலையம்.

**<u>குறிப்பு</u>**

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவ